தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 076/ந/2021
நாள். 07.02.2022

K. இளையபெருமாள்,
வந்தவாசி. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
வந்தவாசி நகராட்சி. – எதிர்மனுதாரர்

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தாலுக்கா, எண்.3/81, பிருதூர் கிராமத்தைச் சார்ந்த திரு. K. இளையபெருமாள், என்பவரின் 25.08.2021 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.08.2021 அன்று பெறப்பட்டு 076/2021 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு, கவனமாக பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

**ஆணை**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தாலுக்கா, எண்.3/81, பிருதூர் கிராமத்தைச் சார்ந்த திரு. K. இளையபெருமாள், தமது மனுவில்

> "நான் வந்தவாசி தேர்வுநிலை பேரூராட்சி செயல்அலுவலரின் உத்தரவின்படி பேரூராட்சியில் 06.05.1998–ல் தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்பட்டு பின் காலமுறை ஊதிய விகிதத்தில் 06.11.1999 அன்று துப்புரவு பணியாளராக பணி அமர்த்தப்பட்டேன். நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அதில் நல்லமுறையில் பணியாற்றி நகராட்சியின் ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவின் படி 30.06.2019 ல் ஓய்வு பெற்றேன்.
>
> இயக்குநர், உள்ளாட்சி நிதிதணிக்கை இயக்ககம் சென்னை அவர்களின் கடிதத்தில் பணி வரன்முறை செய்ததில் தவறு என்றும் அரசு கடித எண்.22501/ME18/3 நாள்.04.03.2019ன் படி அரசு செயலாளர் நகராட்சி நிர்வாக குடிநீர் வழங்கும் துறை கடிதத்தில் மேற்கண்ட அரசாணையின் படி

பணி அமர்த்தப்பட்ட பணியாளர்களின் பணிநியமனம் தொடர்பாக வழக்கு உச்சநீதிமன்றத்தில் உள்ளதாகவும் அத்தீர்ப்பின், அடிப்படையில் எனக்கு ஓய்வூதிய பயன்கள் அனுமதிக்க இயலாது என கூறியுள்ளார். நான் நீதிமன்றம் ஏதும் செல்லவில்லை. எனக்கும் அந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை. அதனால் எனக்கு ஓய்வூதிய பயன் வழங்க இயலாது என கூறி என்னுடைய பணிபதிவேடு மற்றும் முன் மொழிவுகளை வந்தவாசி நகராட்சி ஆணையருக்கு திருப்பி அனுப்பிவிட்டார். நான் ஓய்வு பெற்று 1 ஆண்டு 10 மாதங்கள் ஆகின்றது. எனக்கு வருமானம் எதுவுமில்லை. வயது முதிர்வின் காரணமாக உடல்நிலையும் சரியில்லை இந்த சூழ்நிலையில் எனக்கு வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. அடுத்த ஒரு வேளை உணவிற்கே கஷ்டமாக உள்ளது. எனவே ஓய்வூதிய பலன் கிடைக்க வழி செய்யுமாறு மீண்டும் பணிவுடன் வேண்டுகிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரரின் முறையீட்டு மனு தொடர்பான அறிக்கையை அனுப்பிவைக்குமாறு வந்தவாசி நகராட்சி ஆணையாளரை 07.09.2021 நாளிட்ட கடிதம் வாயிலாக கோரப்பட்டது. வந்தவாசி நகராட்சி ஆணையாளர் தமது அறிக்கையில்

''மனுதாரர் முறையீட்டு மனுவில் கோரிய ஓய்வூதியப் பயன்கள் அனைத்தும் இயக்குநர், உள்ளாட்சித் துறையினரால் வழங்கப்பட வேண்டியது. இருப்பினும் மேற்படி துப்புரவு பணியாளர் ஓய்வுப் பெற்றதால் இயக்குநர் தணிக்கைத் துறைக்கு ஓய்வூதிய முன்மொழிவுகள் அனைத்தும் 18.09.2019 மற்றும் 16.09.2021 அன்று இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

மேலும் தனியருக்கு நகராட்சி மூலம் வழங்கப்பட வேண்டிய பணப்பயன்கள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளது. பணப்பயன்கள் வழங்கிய விவரங்கள் அனைத்தும், சம்மந்தப்பட்ட அனைத்துப்பதிவேடுகள் மற்றும் பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது'' என்று தெரிவித்துள்ளார்.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை மனு தொடர்பாக 11.01.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 04.01.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. 11.01.2022 அன்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கொரோனா தடுப்பு ஆய்வுக்கூட்டத்தில் கலந்துகொள்ள இருப்பதால், மேற்படி விசாரணையில் ஆஜராக முடியாத நிலையில் இன்று 11.01.2022 ல் மேற்படி முறையீட்டு மனு சம்மந்தமாக விவரங்கள் நன்கு தெரிந்த வந்தவாசி நகராட்சி மேலாளர் திரு.என்.இராமலிங்கம், என்பவரை மேற்படி விசாரணையில் கலந்து கொள்ள ஆணையாளர் கேட்டுக் கொண்டார்.

அதன் அடிப்படையில் 11.01.2022 அன்றைய நேரடி விசாரணையில் கலந்து கொண்ட வந்தவாசி நகராட்சி மேலாளர் கீழ்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்தார்.

''மேற்கண்ட துப்புரவுப் பணியாளர் 30.06.2019 அன்று ஓய்வு பெற்றதையடுத்து, அவரது ஓய்வூதியம் தொடர்பான கருத்துருக்கள், உள்ளாட்சி

நிதி தணிக்கைத்துறை இயக்குநருக்கு அனுப்பப்பட்டுவிட்டது என்பதையும், அவருக்கு நகராட்சியிலிருந்து வழங்கப்படவேண்டிய பணப்பயன்கள் அனைத்தும், மனுதாரருக்கு வழங்கப்பட்டு விட்டது என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஒய்வூதியப் பலன்கள் தொடர்பான கருத்துரு, உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர் அலுவலகத்தில் தற்போது நிலுவையில் உள்ளது'' என்று தெரிவித்துள்ளார்.

4) 11.01.2022 அன்றைய நேரடி விசாரணையில் மனுதாரர் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்தார்.

''வந்தவாசி பேரூராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 30.06.2019ல் பணி ஒய்வு பெற்றேன். நான் ஒய்வு பெற்று, 1 ஆண்டு 10 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில், எனக்கு சேரவேண்டிய பணப்பயன்கள் மற்றும் ஒய்வூதியப் பயன்கள் எனக்கு வரவில்லை. பணி நியமனம் தொடர்பாக வழக்கு மற்றும் அதன் தீர்ப்பினை காரணம் காட்டி எனக்கு ஒய்வூதியப் பயன்கள் வழங்க இயலாது என தெரிவிக்கின்றனர். எனக்கும், மேற்கண்ட வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. எனவே, எனது வயது மற்றும் உடல்நிலையை கருத்தில்கொண்டு, எனக்கு சேரவேண்டிய ஒய்வூதியப் பயன்களை பெற்றுத் தருமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

5) முறையீட்டு மனுதாரரின் மனு, அவரது வாக்குமூலம் வந்தவாசி நகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் ஆணையர் சார்பாக விசாரணையில் கலந்து கொண்ட வந்தவாசி நகராட்சி மேலாளரின் வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில்,

- முறையீட்டு மனுதாரருக்கு நகராட்சி நிர்வாகம் மூலம் வழங்கப்பட வேண்டிய பணப்பயன்கள் அனைத்தும் வழங்கப்பட்டு அவை சம்மந்தப்பட்ட அனைத்து பதிவேடுகள் மற்றும் பணிப்பதிவேட்டிலும் பதியப்பட்டுள்ளது என நகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்து தெளிவாகிறது.

- முறையீட்டு மனுதாரர் கோரிய ஒய்வூதிய பயன் அனைத்தும் இயக்குநர் உள்ளாட்சி நிதிதணிக்கை துறையால் வழங்கப்பட வேண்டியது. நகராட்சி நிர்வாகம் இது சம்மந்தமாக முன்மொழிவுகள் அனைத்தையும் 18.09.2019 மற்றும் 16.09.2021ல் இயக்குநர், உள்ளாட்சி நிதிதணிக்கை துறைக்கு அனுப்பியுள்ளது.

- ஆனால் உள்ளாட்சி நிதிதணிக்கை துறை இதுபோன்ற பணி நியமனம் தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாக தெரிவித்து அத்தீர்ப்பின் அடிப்படையிலேயே ஒய்வூதிய பயன்கள் அனுமதிக்க இயலும் என்று தெரிவித்து பணிப்பதிவேடு மற்றும் முன்மொழிவுகளை நகராட்சி நிர்வாகத்திற்கே திரும்ப அனுப்பியுள்ளதை

இயக்குநர், உள்ளாட்சி நிதிதணிக்கை இயக்குநரின் 11.12.2019 நாளிட்ட கடிதம் மூலம் அறிய முடிகிறது''.

- எனவே, நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கில் வழங்கும் தீர்ப்பின் அடிப்படையில் மனுதாரரின் குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து மனுதாரரின் பணப்பயன்கள் கிடைத்திட ஆவன செய்திடுமாறு நகராட்சிகளின் நிர்வாக இயக்குநரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 07 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.K.இளையபெருமாள்,
3/81, பிருதுர் கிராமம்,
வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
வந்தவாசி நகராட்சி,
வந்தவாசி.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்
முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.